<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண்.122/2018** **நாள்.13.07.2023**

2023ம் ஆண்டு ஜுலை திங்கள் 13ம் நாள் பிரிதவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ்வரி | தொழில் | |
| த. பெ./க.பெ. | ராஜேந்திரன் | சாதி | |
| கிராமம் | மேல்மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 59 |

**<u>பி.சா.2</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

I. வழக்கின் 1ம் பிரதிவாதி என் அண்ணன் ஆவார். என் தந்தை பெயர் கண்ணிகவுண்டர் . கண்ணிகவுண்டருக்கு 5 பெண் பிள்ளைகளும், 4 ஆண்களும் வாரிசுகள். மேற்படி 9 நபர்களில் ஒரு அக்கா, ஒரு அண்ணன் இறந்துவிட்டார்கள். நானும், எனது அண்ணன், மற்றும் ஒரு சகோதிரி மேல்மலையனூரில் இருக்கிறோம். மற்றவர்கள் வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள். 1983ம் ஆண்டு அனைவரும் இந்தியாவிற்கு வந்து மற்றவர்கள் வெளிநாட்டிற்கு சென்று விட்டார்கள். 1992ல் ஆண்டு எங்கள் குடும்பத்தில் கூர் சீட்டு எழுதினார்கள். என் தாத்தா பெயர் பட்டனகவுண்டர். நாங்கள் 1983ல் இந்தியாவிற்கு வரும் போது என் தாத்தா இறந்துவிட்டார். கூர் சீட்டு எழுதும் போது பட்டண கவுண்டர் உயிருடன் இல்லை. என் அப்பாவும், இரண்டு சித்தாப்பாகளும் சேர்ந்த பாகம் பிரித்துக்கொண்டார்கள். பாகம் பிரித்து கொண்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். பட்டண கவுண்டர் சொத்துக்களை கிரையம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. என் தந்தை கண்ணிகவுண்டர்மூத்தவர் என்பவதால் 10 செண்ட் கூடுதலாக பாகம் ஒதுக்கினார்கள் . பட்டண கவுண்டர் என்பவர் தான் முன்னின்று பாகம் பிரித்தார் என்று என் நி்ருபண வாக்கு மூலத்தில் சொல்லியிருந்தால் அது தவறு தான்.

II. 04.03.1993 ல் தேதியில் ஏற்பட்ட அக்ரிமெண்ட எழுதும் போது நான் இருந்தேன். மேற்படி அக்ரிமெண்டில் 1 ஏக்கர் 5 செண்ட்க்கு எழுதப்பட்டது. மேற்படி அக்ரிமெண்ட் பதிவு செய்யப்படவில்லை. கண்ணிகவுண்டருக்கும், சடைய கவுண்டருக்கும், ஒரே இடத்தில் பாகம் வைத்தார்கள். ரங்கசாமிக்கு வேறு இடத்தில் பாகம் வைத்தார்கள். என் அப்பா கூர்

சீட்டு சரிவராது என்று சொல்லி பாக பத்திரம் எழுதிக்கொள்ளலாம் என்று சொன்னார். என் தந்தை இறந்த பிறகு பாகம் பத்திரம் எழுதுவதற்கு என் சித்தப்பாக்களை அழைத்தார்கள். ரங்கசாமி கவுண்டரை பாக பத்திரம் எழுத அழைத்த போது எனக்கு தனியாக பாகம் ஒதுக்கிவிட்டீர்கள் அதனால் வரவில்லை என்று சொல்லிவிட்டார். கண்ணிகவுண்டருக்கு வந்த பாகசொத்து சொக்கலிங்கம் பெயரில் எழுதி கொடுத்து விட்டார்கள். அந்த பாக பத்திரத்தில் 10 செண்ட் கூடுதலாக எழுதிவைத்தார்கள். பாக பத்திரத்தில் எழுதி வைத்த சொத்து மட்டும் தான் கண்ணிகவுண்டருக்கு சொந்தமானது என்றால் சரிதான். பாக பத்திரத்தில் அனைத்து சொத்துக்களையும் சொன்னால் அதிக செலவு ஆகும் என்பதால் என் அப்பாவிற்கு வைக்க பட்ட சொத்தை மட்டும் பாக பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

III. சொக்கலிங்கம் அவருக்கு வந்த சொத்தை பட்டுசாமிக்கு அடமானம் வைக்கும் போது அவருக்கு பாகம் வந்த சொத்தை மட்டும் அடமானம் வைத்தார் என்றால் சரிதான். தஞ்சம்மாள், சிவலிங்கம் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கும் என் அண்ணன் சொக்கலிங்கம் பெயரில் பட்டா வந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் தான் வாதிகளுக்கு வந்த சொத்தும், உள்ளது என்றால்சரிதான். 1ம்பிரதிவாதி அவர் பெயரில் பட்டா வந்துவிட்டதால்அதில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் தனக்கு சொந்தமானது என்று சொல்லுகிறார் என்றால் சரிதான். வாதிகளுக்கு பாகமாக வந்த சொத்துக்களுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதிகள் எத்தனை செண்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு அருகில் வாதிகள் எந்த சொத்துக்களையும் அனுபவம் செய்யவில்லை. வழக்கு சொத்துக்களை வாதிகள் தான் பயிர் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

IV. 2ம் பிரதிவாதி விக்னேஷ் என்பவர் சொத்துக்கு சம்பந்தம் படாதவர் . 26.04.2018 தேதியில் 1ம் பிரதிவாதி ஒரு அடமான கடன் பத்திரம் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 03.04.2016 ல் 1ம் பிரதிவாதி பட்டு சாமி என்பவருக்கு அடமான பத்திரம் எழுதிக்கொடுத்தார். பட்டு சாமி என்பவர் 1ம் வாதியின் மகன் ஆவார். பட்டுசாமிக்கு எழுதிக்கொடுத்த சொத்தையும், கூடுதலாக வந்த சொத்தையும், சேர்த்து 2 ம் பிரதிவாதிக்கு அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். பட்டுசாமிக்கு அடமானமாக 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த சொத்து மட்டும் தான் 1ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த சொத்து என்றால் சரிதான். என் அண்ணனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.